


17.04.2025

தலைப்பு செய்திகள்

- நாட்டின் பாதுகாப்பில் மத்திய ரிசர்வ் காவல்படையினரின் பங்களிப்பு அளப்பரியது என்று உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா புகழாரம் சூட்டியுள்ளார்.
- பாதுகாப்பு துறை, தற்சார்பு பாதையில் வேகமாக முன்னேறி வருவதாக மத்திய அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.
- ஸ்மார்ட் போன் ஏற்றுமதி சென்ற நிதியாண்டில் 2 லட்சம் கோடி ரூபாயை எட்டி சாதனை படைத்துள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்தார்.
- கோவையில் நெசவு தொழிலாளர்களின் போராட்டம் தொடர்பான பிரச்சனைக்கு விரைவில் தீர்வுகாணப்படும் என்று மாநில அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு சட்டப்பேரவையில் உறுதியளித்துள்ளார்.
- ஜெர்மனியில் நடைபெறும் பவேரியன் சர்வதேச டென்னிஸ் சாம்பியன்பட்ட போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் ரோஹன் போபண்ணா, பென்ஷெல்டன் இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் மத்திய ரிசர்வ் காவல்படையினரின் பங்களிப்பு அளப்பரியது என்று உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா புகழாரம் சூட்டியுள்ளார்.

மத்திய ரிசர்வ் காவல்படையினரின் 86-வது நிறுவன நாளையொட்டி, மத்திய பிரதேச மாநிலம் நீமுச்சில் இவ்வீரர்களிடையே உரையாற்றிய அமைச்சர், பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு ரிசர்வ் படையினரின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டிலிருந்து நக்சல் தீவிரவாதம் அடுத்த ஆண்டு மார்ச் இறுதிக்குள் வேரோடு களையப்படும் என்று அமைச்சர் மீண்டும் உறுதிப்பட தெரிவித்துள்ளார்.

மத்திய ரிசர்வ் காவல்படையினர் இப்பணிகளில் முக்கிய பங்காற்றுவார்கள் என்றும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

நாட்டின் பாதுகாப்பு பணியில் இதுவரை 2 ஆயிரத்து 264 மத்திய ரிசர்வ் படைவீரர்கள் தங்களது இன்னுயிரை தியாகம் செய்திருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ரிசர்வ் காவல்படையினருக்கு வீர தீர விருதுகளை வழங்கி கவுரவித்த அமைச்சர், ஷாகித் ஸதல் நினைவிடத்தில் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

முன்னதாக ரிசர்வ் காவல் படையினரின் அணிவகுப்பு மரியாதையை அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

நாட்டின் பாதுகாப்பு பிரிவு தற்சார்பு பாதையில் விரைவாக முன்னேறி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாதுகாப்பு படையின் எதிர்காலம் தொடர்பான மாநாட்டில் இன்று துவக்கிவுரையாற்றிய அவர், தளவாடங்கள் ஏற்றுமதியிலும், நம்நாடு வலுவான நாடாக உருவாகி வருவதாக குறிப்பிட்டார்.

பாதுகாப்பு பிரிவின் திறன்களை மேம்படுத்த மத்திய அரசு முன்னுரிமை வழங்கி வருவதாக கூறிய அவர், முப்படைகளை நவீனபடுத்தவும் அரசு தனிகவனம் செலுத்தி வருவதாக எடுத்துரைத்தார்.

தளவாட உற்பத்தியில் தற்சார்பை முன்னெடுத்துச் செல்லும் வகையில் 2025-ம் ஆண்டை சீர்த்திருத்தங்களின் ஆண்டாக அமைச்சகம் அறிவித்திருப்பதை திரு. ராஜ்நாத் சிங் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

அஷ்வினி வைஷ்ணவ்

நம் நாட்டின் ஸ்மார்ட் போன் ஏற்றுமதி சென்ற நிதியாண்டில் 2 லட்சம் கோடி ரூபாயை எட்டி சாதனை படைத்துள்ளதாக மத்திய மின்னணு தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சென்ற நிதியாண்டின் முதல் 10 மாதங்களில் இந்தியாவின் மிகப்பெரிய ஏற்றுமதியாக ஸ்மார்ட்போன் பிரிவு திகழ்ந்ததாக தமது சமூக வலைதளப்பதிவில் அவர் கூறியுள்ளார்.

2013-14-ம் ஆண்டுகளில் ஸ்மார்ட்போன் ஏற்றுமதி 167-வது இடத்தை வகித்ததாகவும், ஆனால் தற்போது முதலிடத்தை எட்டியிருப்பதாகவும் அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

2020-ம் ஆண்டில் ஊக்கத்தொகையுடன் கூடிய ஸ்மார்ட் போன் உற்பத்தி திட்டத்தை அரசு தொடங்கியதை அடுத்து இப்பிரிவு ஏறுமுகம் கண்டதாக அவர் எடுத்துரைத்தார்.

லட்சக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகள், குறிப்பாக பெண்களுக்காக இத்துறையில் உருவாக்கப்பட்டதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

ஷிவ்ராஜ்சிங் சௌஹான்

பிரேசில் நாட்டின் நீர்ப்பாசன முறைகளை ஆய்வு செய்ததுடன், விவசாயத்தின் நவீன தொழில் நுட்பங்களை பார்வையிட்டதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

15-வது பிரிக்ஸ் வேளாண் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக பிரேசில் சென்றுள்ள அமைச்சர் தமது சமூக வலைதளப்பதிவில் சோயாபீன் உற்பத்தியில் பிரேசில் நாட்டின் தனித்துவ நிலைப்பாடுகளை வெகுவாக பாராட்டியுள்ளார்.

பிரசிலின் தொலைநோக்கு ஆராய்ச்சிகள் மற்றும் உயர் தொழில்நுட்ப பயன்பாடுகளையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்தியாவில் வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள உலக உணவு விழாவில் பங்கேற்க அந்நாட்டிற்கு அழைப்பு விடுக்கப் பட்டிருப்பதாகவும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

ஐ.நா.

நடப்பு நிதியாண்டில் 6.5 சதவிகித வளர்ச்சியுடன் இந்தியா உலகளாவிய வேகமான வளர்ச்சி நாடாக உருவெடுக்கும் என்று ஐ.நா.வின் வர்த்தக மேம்பாட்டு அறிக்கை தெரிவித்துள்ளது.

சீனாவின் வளர்ச்சி 6.4 சதவிகிதமாகவும், அமெரிக்காவின் வளர்ச்சி ஒருசதவிகிதமாகவும் இருக்கும் என்று இந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

அதேபோல் ஐரோப்பிய யூனியன் நாடுகளின் வளர்ச்சி விகிதம் ஒருசதவிகிதமாக இருக்கும் என்று கணித்துள்ள ஐ.நா.வின் வர்த்தக அறிக்கை, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி நாடுகளின் வளர்ச்சி ஒருசதவிகிதத்திற்கு குறைவாகவும், ஜப்பானின் வளர்ச்சி 0.5 சதவிகிதமாகவும் இருக்கும் என்றும் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

தமிழக அமைச்சரவை கூட்டம்

தமிழக அமைச்சரவை கூட்டம் முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் இன்றுமாலை நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் புதிய தொழில்நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளிப்பது, பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்படும் என தெரிகிறது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் - சிறுசேரி

செங்கல்பட்டு மாவட்டம் சிறுசேரி தொழில்நுட்ப பூங்காவில் ஆயிரத்து 882 கோடி ரூபாய் முதலீட்டில், ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலான தரவு மையத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று திறந்துவைத்துள்ளார்.

முதலமைச்சர்

முன்னதாக சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பிறந்தநாளை ஒட்டி சென்னை கிண்டியில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖

கவனஈர்ப்பு தீர்மானம்

கோவை மாவட்டத்தில் நெசவுத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு போராட்டம் நடத்தி வரும் பிரச்சனைக்கு மிக விரைவில் தீர்வு காணப்படும் என்று மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இது தொடர்பான கவனஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்து பேசியஅவர், இதுதொடர்பாக உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை அரசு கவனத்தில் கொள்ளும் என்றார்.

கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இப்பிரச்சனை குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திவருவதை சுட்டிக்காட்டிய அவர், மிகவிரைவில் இப்பிரச்சனைக்கு சுமூக தீர்வு எட்டப்படும் என்றும் உறுதியளித்தார்.

இதனிடையே பேரவையில் தொல்லியல் துறை மானிய கோரிக்கை கொள்கை விளக்க குறிப்பை வெளியிட்ட அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, தமிழ்நாட்டில் இதுவரை 411 வரலாற்று சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக மத்திய தொல்லியல்துறை அறிவித்துள்ளது என்றார்.

இவற்றில் 251 வரலாற்று சின்னங்களும், 160 தொல்லியல் தளங்களும் அடங்கும் என்று கூறினார்.

-----------

தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் 7 ஆயிரத்து 637 கோடி ரூபாய் மதிப்பிலான திருக்கோவில் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை கொள்கை விளக்க குறிப்பில் இன்று இதனை தெரிவித்த அமைச்சர், திருக்கோவில் திருப்பணிகளுக்காக 473 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

-----------

சாமிநாதன்

திருச்சி கலைக்காவிரி நுண்கலை கல்லூரி மாணாக்கருக்கு மாதந்தோறும் 500 ரூபாய் வீதம் கல்வி உதவிதொகை வழங்கப்படுவதாக மாநில செய்தித்துறை அமைச்சர் திரு.சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை கொள்கை விளக்க குறிப்பில் இதனை தெரிவித்த அவர் தென்மாவட்ட மாணாக்கர் பயன்பெறும் வகையில் ஒருகோடியே 58 லட்ச ரூபாய் மதிப்பில் மதுரையில் அரசு கவின் கலைகல்லூரி வரும் கல்வியாண்டு முதல் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

-----------

ராஜேந்திரன்

சுற்றுலாத்துறையில் அதிக முதலீடுகளை ஈர்க்கவும், இத்துறையில் தொழில்நிறுவனங்களை ஊக்குவிக்கவும் தமிழ்நாடு சுற்றுலா ஊக்குவிப்பு வசதி சட்டம் இயற்றப்பட உள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை கொள்கை விளக்க குறிப்பில் இதனை தெரிவித்த அவர் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் மாமல்லபுரம், ராமேஸ்வரம், கன்னியாகுமரி, பழனி வேளாங்கண்ணி உள்ளிட்ட பகுதிகளில் 300 கோடி ரூபாய் மதிப்பில் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

பெரியார் அணையிலிருந்து, மதுரைக்கு தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர், சென்னையில் இந்த நிதியாண்டில் 30 பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளதாகவும், 273 பூங்காக்கள் மேம்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

தீயணைப்பு

தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை சார்பில் வரும் 20-ம் தேதிவரை கடைப்பிடிக்கப்படும் தீ தொண்டு வாரத்தை ஒட்டி, திருச்சியில் உள்ள அரசு கட்டிடங்களில் தீ விபத்தை பாதுகாப்பாக எதிர்கொள்வதற்கான ஒத்திகை பயிற்சிகள் நடத்தப் படுவதாக மாவட்ட தீயணைப்புத்துறை அலுவலர் திரு. எஸ்.வினோத் தெரிவித்துள்ளார்.

இதனொரு பகுதியாக திருச்சி அரசு மருத்துவமனையில் தீ விபத்தை எவ்வாறு எதிர்கொள்வது குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றதாக அவர் கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

கொத்தமல்லி வாய்ஸ்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலவும் தட்பவெட்ப சூழலால் கொத்தமல்லி விலை கடும் வீழ்ச்சி கண்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

நாமக்கல் மாவட்டத்தில் நடப்பாண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுபெற தகுதியுடையவர்கள் வரும் 3-ம் தேதி முதல் இணைய தளத்தில் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் டாக்டர் உமா கூறியுள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வழங்க தகுதியுடைய பயிற்றுனர்கள் வரும் 22-ம் தேதி நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளலாம் என ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகள் தேசிய அடையாள அட்டை எண் பெற பதிவு செய்வதற்கு இம்மாத இறுதிவரை காலஅவகாசம் வழங்கப்பட்டு உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் கூறியுள்ளார்.

நெகிழிக்கு மாற்றாக மஞ்சப்பை பயன்படுத்தும் வகையில் தானியங்கி மஞ்சப்பை வழங்கும் இயந்திரத்தை தர்மபுரி பேருந்து நிலையத்தில் ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் இன்று தொடங்கிவைத்தார்.

தூத்துக்குடி மாவட்ட ஓட்டப்பிடாரம், புதூர், விளாத்திக்குளம் பகுதிகளில் ஆயிரத்து 500 பண்ணை குட்டைகள் அமைக்கப்படவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. இளம்பகவத் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

பெரிய வியாழன்

கிறிஸ்தவர்களால் தவக்காலத்தின் முக்கிய நிகழ்வான பெரிய வியாழன் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை திருத்தலம் உள்ளிட்ட கிறிஸ்தவ தேவாலயங்களில் சிறப்பு திருப்பலி மற்றும் ஆராதனை இன்றுமாலை நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

ஜெர்மனியில் நடைபெறும் பவேரியன் சர்வதேச டென்னிஸ் சாம்பியன் பட்ட போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் ரோஹன் போபண்ணா, பென் ஷெல்டன் இணை - பெல்ஜியத்தின் சாண்டர், போலந்தின் ஜான் இணையை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்றிரவு ஏழரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் - சன்ரைஸர்ஸ் ஹைதராபாத்தை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖

இருவரி

நெகிழிக்கு மாற்றாக மஞ்சப்பை பயன்படுத்தும் வகையில் தானியங்கி மஞ்சப்பை வழங்கும் இயந்திரத்தை தர்மபுரி பேருந்து நிலையத்தில் ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் இன்று தொடங்கிவைத்தார்.